இ-ம்-ராகநாமக்கிரியை-அடதாளம்.

பல்லவி

நாரணனுக்குச்சமமார் ஆதிசேஷனும்
நாவினுற்சொல்லப்போமோமனமே-அந்த

அநுபல்லவி.

வாரணன்முறையிட்டபோதுசகல
தேவதைகளகப்பட்டவவஸ்தையைப்பார்மனமே நாரண

சரணங்கள்,

ஆயிரம்பாம்புகளானாலு மென்னவொரு
ஆதிசேஷனுமோ அதுபோல
ஆயிரந்தெய்வங்களானாலும் மச்சரன்
அடிப்பொடிக்கிணையாமோ மனமே நாரண

சூட்சுமதேகந்தனைக்கொண்டமின்மினிபூச்சிபோகு
சூரியன்சமமாமோ அதுபோல
மோட்சமதைக்கொடுக்க வகையிலாததெய்வங்கள்
முகுந்தனுக்கெதிராகுமாமனமே நாரண
சகலநட்சத்திரங்களொன்றானாலுமொரு
சந்திரன்சமமோ அதுபோல
அகிலதேவதைகளெல்லா மொன்றாகிமுரா
ஹரிக்குச்சமமாமோ நாரண

காலுகாலுன்னலட்சம் நாய்களானாலுமொரு
காமனுஷன்காமசமோ அதுபோல
லோலாயப்படுமன்ய தேவதைகளுமலட்சுமி
லோலனுக்கெதிராமோ மனமே நாரண
காக்கைகளொருபத்துக் கோடியானாலுமொரு
கருங்குயிற்சமமாமோ அதுபோல

பேய்க்கூட்டமான இக்ஷுத்ரதேவதைகளெல்லாம்
பெருமானுக்கெதிராமோ மனமே — நாரண

நக்ஷத்ரங்களெத்தனை வளமானாலுமந்த திரு
நாட்டுக்குச்சமமாமோ அதுபோல
இகத்திலுள்ள இதர தேவதைகளெல்லாம்ஜெக
தீசனுக்கெதிராமோ மனமே — நாரண

வேஷக்காரரெத்தனை பேரானாலும்பராங்குச
தாசர்கள்சமமாமோ அதுபோல
நாசமடையும்பலதேவதைகளும்கஞ்ச
கமலனுக்கெதிராமோ மனமே — நாரண

இ-ம்-எதுகுலகாம்போதி-அடதாளம்.

பல்லவி.

கண்ணனைத்தவிர்த்தெய்வமில்லையே இதைக்
கண்டறிந்திலீரெம்பென்சொல்லையே — கமலக்கண்ணா

அநுபல்லவி.

மண்ணாந்தயன்பாதன்தன்னையேவிட்ட
மனிதர்விழுவாரேயமன்முன்னையே — கமலக்கண்ணா

சரணங்கள்.

ஆனையர்ணது ஆதிமூலமேயென்
றழைத்தாதுதித்தார் சொல்லுமேமூ
மானையேக்குங்கையன்முன்னமே-அப்
பார்வதிக்குமாத்தவைகளுமென்னுமே — கமலக்கண்ணா

பிறப்பில்லாதெய்வத்தையேகண்டு
பிடித்தால்சரணமாம் வைகுந்தத்தையே
இப்பிறப்புண்டதெய்வத்தையேதொழு
தேத்துயாசகரகத்தை — கமலக்கண்ணா

நாரணனுக்கே பரத்துவமேயென்று
நால்வேதங்களிலுமுரைக்குமே
கூறுந்தெய்வமெல்லாமனிதியமே-பராங்
குசதாசன்சொல்வதுசத்தியமே — கமலக்கண்ணா

இ-ஈ-சாவேரி-ஜம்பைதாளம்.

பல்லவி.

இருக்குந்தெய்வமொன்றுதான்-இதை
யெல்லோருமுணர்ந்துஜ்ஜீவியுங்கள்

அநுபல்லவி.

உருக்குஸ்தம்பத்தி லிருந்துற்பவித்த
அரிக்கிணையில்லையெவருமாஸகுயல இருக்கும்

சரணங்கள்.

வேதம்வேதசாஸ்திரங்களிலும்
வாதுசெய்புராணங்களிலும்
தீதில்லா இதிபாகபகவத்
கீதையாதிகளிலும்வியாபித் திருக்கும்

போகமாக்கியமாதிசகல
யாகவோமஜபத்பமாதி அ
னேகதர்மக்ஞானபத்தி
யோகமார்க்கங்களிலும்வியாபித் திருக்கும்

அண்டபிண்டங்களிலுஞ்சகல
மண்டலங்களிலுமனந்த அந்த
அண்டகோடிகளிலும்பகி
ரண்டமாதிகளிலும்வியாபித் திருக்கும்

கதிரவிலாபனுகீதிகளிலும்
உதிரும்நட்சத்திரங்களிலும்
பிரிதிவு அப்புவாய்வாகாசதுகளை
மதிலும்தேஜஸ்திலும்வியாபித் திருக்கும்

மரங்கள்மலைகள்செடிகளதிலும்
கிளிகள்பட்சிகள்மிருகங்களதிலும்
மரங்கள்குகையிற்சராசரா
சரங்களுமெங்கெங்கும்வியாபித் திருக்கும்

விதிசிவாதிதேவர்களிலும்
திதிசுதாதி அசுரர்களிலும்
எதிகுலாதிபதிகளதிலும்
நதிநதாதிகளதிலும்வியாபித் திருக்கும்

வியாசாதிமுனிவர்களிலும்
பூசுராதிமனிதர்களிலு
மாசில்லா ஸ்ரீபராங்குசாதி
தாசபூதர்களிலும்வியாபித்

இ-ம்-நாட்டை-ஆதிதாளம்.

பல்லவி.

நம்பிக்கெட்டவர்களில்லை ஹரிநாமமந்திரமெனுஞ்சொல்லை.

அநுபல்லவி.

நம்பிவந்தடுத்த இராவணன் தம்பியை
அன்புடனுடையெனனுடைவன்புதங்களை
ஆனையைக்காத்தவரார்மனமே
அதைசற்றேநீயும்நுப்பார் நம்பி

சரணங்கள்.

மானுருவாய்வந்தமாரீசன் தனைக்கொன்ற
ஜானகிராமனைதிவ்யசரணகமலங்களை நம்பி

திரௌபதிமானமதைக்காத்து
ரக்ஷணைசெய்ததாரதையறி நம்பி

பாபியிரண்ணியனுக்பிரகலாதனனுக்குவந்த
ஆபத்தைத்தீர்த்தவென்னையன்பொன்னடிகளை நம்பி

பாசபந்தங்கள்வலையறுக்கும்நல்ல
சாஸ்வதபதவியைக்கொடுக்கும் நம்பி

ஆசையுடனேஇந்தஅவனிக்குள்பராங்குச
தாசர்கள்பணியும் செந்தாமரைககமலனை நம்பி

இ-ம் செஞ்சுருட்டி அடதாளம்.

பல்லவி.

நம்புங்கள்நம்புங்கள் நாரணனடிகளை
நற்கதிதந்துரட்சித்திடுவார்

அநுபல்லவி,

நம்பாதெவர்க்கெவனுமிருந்து-பொல்லா
நரகத்துக்காளாயமர்த்திடுவார்
நம்பாதெவர்க்கெமனுமிருந்து-பொல்லா
நரகத்துக்காளாயமர்த்திடுவார் நம்பு

சரணங்கள்.

நம்பினயானை சனககாதிமூலமாகி
ஸ்தபதவிதனைககொடுத்ததார்
நம்பாமலிருந்தயானை தந்தலையார்
நாழிகைக்குள்ளுகலையுடைத்தார் நம்பு

நம்பினபரதாழ்வான்றனக்குமுன்
னுகபரட்சியமாயுதித்தார்
நம்பாமலிருந்த இரணியகசிபன்முன்
நரசிங்கமாயவனுயிர்வதைத்தார் நம்பு
நம்பினவிபீஷணாழ்வான்றனக்குஸ்ரீ
ராமனுபவதரித்தரசளித்தார்
நம்பாமலிருந்த இராவணாசுரன பக்கில்
நமனுமிருந்தவன் தலையறுத்தார் நம்பு
நம்பினபஞ்சபாண்டவருக்கு ஸ்ரீகிருஷ்ண
னுயிருந்தவரிடம்போககடித்தார்
நம்பாமலிருந்த துரியோதனனுக்குதஷ்ட
னுயிருந்தவன்மண்ணில்விழவடித்தார் நம்பு
நம்பினாரணனைத்தடையுங்கோவினிருக்க
நரசென்மமழிந்துபோய்விடுமுன்னே
நம்பாமற்கெட்டாலகெடுங்காண்பராங்குச
நாமனைத்தவிரவேறுதுணையில்லையே நம்பு

இ-ம்-தன்னியாசி-ஆதிதாளம்.

பல்லவி.

தூஷிப்பவர்கள்சுகப்பட்டடும்-நம்ம
தோஷங்களைத்தனையும்விட்டடும்

அநுபல்லவி.

தூஷிப்பவருடன்துவேஷம் வையாதே-நம்மை
பேஷிக்கஸ்ரீஹரிபுவியிலிருப்பாரினி
பூஷணையுமவரும் தூஷணையும்மேல்
வேஷத்துக்கே ஆத்மாவுக்குயறிநீ தூஷி

சரணங்கள்.

பெற்றவரவர்முதலே ர்சிக்கை
பெற்றதிஞெலென்னமண்மேலே
குற்றமில்லாதகுழந்தைதன்னிடமிட
றக்கனைபுடபோசுகினைபாரிகைசயறிநீ
பத்துநேரிட்டாலுமசெத்தாப்போலிருமினி தூஷி

உலகத்திற்குஞானம்மெய்யல்லவோஞான.
முள்ளவதற்குலகம்பொய்யல்லவோ
பலபலவிதமாகபாரிலுள்ளபேரெல்லாங்
குலைக்கும்நாய்களைப்போலே குலைத்ததினாலென்ன
சலசதளரட்சணை சலியாமல்தினநிதம்
மலையைப்போல்வருமிடர்பஞ்சுப்போல்விலகும் ஞானி

அபசாரிகளையிந்தத்தவியில்மகா
உபகாரிகளென்றறிமனதில்
அபரிமிதமாயபவாதம் வருவதெல்லாம்
சபலமேபரர்க்குசதாசனைக்கேளினி
விபரீதஞானத்தில்விழுகாமலேஅரியி
னுபயதிருவடியைஉறுதியுடனேபிடி

இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி,

கண்டுசேவிப்போம்வாரீர் பட்டாபிராமனை.

அநுபல்லவி:

தெண்டனிட்டநீலகண்டன் துதிபாதத்தைக்
கண்டுமனமகிழ்ந்துகொண்டுவேடிக்கையாய்க் கண்டு

சரணங்கள்,

துண்டதாடகியைக்கண்டவுடனேயவன்
மண்டையுருளும்படிதெண்டனைசெய்தவரைக் கண்டு
மண்டலத்தரசர்கள்நின்றுபுகழ்ஸ்ரீ
கண்டன்வில்லைரெண்டுதுண்டாயொடித்தவரைக் கண்டு
வேகமதாய்முனியாகத்தைமுடித்தன்
பாகக்கல்லைப்பெண்ணாகச்செய்தவரைக் கண்டு
தெண்டகாரண்யஞ்சென்றுகரனைமுகம்
கொன்றுநரிகள்நாய்க்கள்மடிந்தவரைக் கண்டு
வந்துப்பணிந்தஅநுமன்றாவிமகனைத்
தொந்தமாக்கிச்சேதுபந்தனஞ்செய்தவரைக் கண்டு
மண்டியரக்கன்தசகண்டன்சிரசுகளைத்
துண்டித்தவிசயகோதண்டபாணியைக் கண்டு.

## ஸ்ரீபராங்குசதாஸர் அருளிச்செய்த

மச்சாவதாரபராங்குசதாசனை
ரட்சித்தருளுஞ்செயலட்சுமிசமேதனைக் — கண்ணி

இ-ம்-காதகாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி,

ஸ்ரீரகுபதியுந்தன் திருமலரடிகளைச்
சேருவதினிநானெப்போ
சாரஹீனசம்சாரக்கடலைநான்
தாண்டிக்கரையேறுவதெப்போ — ஸ்ரீரகுபதி

மாயப்பிரபஞ்சத்தை மறந்துன்னைக்காண
உபாயமறிவதுநானெப்போ
காயத்தைப்போக்கியென் கர்த்தனேயென்னுடன்
கலந்துகொள்வதினியெப்போ — ஸ்ரீரகுபதி

காமக்குரோதலோப மோகத்தைவெறுத்துநான்
கடைத்தேறுவதினியெப்போ
நேமமாயிருந்தனுமத்தை மனதினில்
நினைந்துமகிழ்வடைவதெப்போ — ஸ்ரீரகுபதி

ஓடித்திரியுநெஞ்சைவோடாமலடக்கினு
னுறுதிபடுத்துவதுமெப்போ
நாடியுன்பாதத்தைக்கொண்டர்மெடியாருடன்
கூடிச்சுகித்திருப்பதெப்போ — ஸ்ரீரகுபதி

ஆசையென்றபிசாசைத்துரத்தியுன்
னடியைப்பணிவதுநானெப்போ
தாசர்கள்திருவடிதூசியென்சிரசினில்
தரித்துக்கொள்வதினியெப்போ — ஸ்ரீரகுபதி

எவரென்னவைதாலுமெதிர்த்து பேசாமல்நா ன
மவுனமாயிருப்பதுமெப்போ
ரவிகுலசந்திரபராங்குசதாசனை
ரட்சிப்பதினிநீயெப்போ — ஸ்ரீரகுபதி




இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்.

பல்லவி.

உன்னையேநம்பினேனையா அரியேயினி

அநுபல்லவி.

என்னையாளத்தடைசெய்வதேனெந்தன்றுரையே (உனை)

சரணங்கள்.

இலையைப்பெண்ணாக்கியபாதா-உந்தன்
சித்தமென்மீதிற்சற்றேயிரங்காதா
மலையைச்சுமந்தபிரக்யாதா-என்னை
மன்னித்தருளுமடியார்க்கருள்போதா (உனை)
உத்தமனேகனகராமா-எந்தன்
ஊழ்வினைகளைத்தீருமேபரந்தாமா
குற்றமென்மேலெண்ணலாமா-இந்தக்
கொடுமைக்கென்னசெய்வேன்கோவிந்தநாமா (உனை)
தீரனேநானுனக்காளாயாவ
தெப்போ அரியேஒருக்மணிமணாளா
ரோரிக்கைதாமலர்த்தாளா
பராங்குசதாசன்வரமதைக்கொடுக்குந்தயாளா (உனை)

இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்

பல்லவி.

உனையேநம்பினேன் ஆதரிகோவிந்தமுரஹரி.

அநுபல்லவி.

உனைவேநம்பினேனிந்த உலகத்தில்வேறொன்றறியேன்
எனையாளலாமேல்மங்கைமணாளனேநான்

சரணங்கள்.

கல்லைப்பெண்ணாக்கவில்லையா-இன்னமுமந்தக்
கருணையென்மீதில்லையா
எல்லாமறிந்துரைக்கென்னநானேதுவேனே
உனைவிட வேறுதிக்கில்லை இல்லைநான் (உனை)

இன்னமென்னுடன்வாதா அன்னமுயிர்த்த
ஏழையின்மேலிரங்காதா
அன்னைபோல்வந்தென்னைரட்சியுமிந்த
மன்னிலந்தனில் ஓபன்னகசயனனேநான் (உனை)

மோசஞ்செய்யாதோராகவாகருடனிட
மூதுகேறியெந்தன்மின்னுகவா
பாசமறச்செய்தெந்தனுசைதீரவென்னோடு
பேசிப்போபராங்குசதாசானுகூலனேநான் (உனை)

இ-ம்-நாதநாமக்கிரியை—அடதாளம்.

பல்லவி.

இன்னமென்மீதில்தயவேன்வாராதையா.

அநுபல்லவி.

என்னகோபமோ எவரிட்டசாபமோ (என்)

சரணங்கள்.

சரணமென்றுநானுந்தன்தாள்வணங்கினேன்
கருணைபாரையாபாற்கடலில்வாசனே (இன்)
அன்னையாயென்னைவந்தாதரியாவிடின்
பின்னையார்த்துணைபிரசன்னராகவா (இன்)
சிக்கில்லாமலேயென்னைசெய்துவிடு இனி
திக்குவேறில்லைசிவனேத்ரனே (இன்)
என்னசொன்னாலும்உனக்கிரக்கமில்லையே-நா
னென்னசெய்குவேன்தலைவிதிக்குநாராயணா (இன்)
மடுவில்யானையைமனம்வைத்துஆண்டதைப்போல்
கொடுமென்றன்வரந்தனைபராங்குசாவதாரனே (இன்)

இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

எனைபாட்கொள்ளரியே இப்புவிதனில்.

அநுபல்லவி.

உன்னையல்லாலென்மனதிலொன்றுமறியேன் (எனை)

சரணங்கள்.

நரகக்குழியிலுறிளட்டும்பத்து
நாலுலட்சமதுயோனியில்நான்பிறந்து
இறந்தலைந்ததுபோதும்இனிமேலெனக்
கிழிவல்லாமற்செய்து இத்தரையினில் (எனை)

ஆசையெனும்பிசாசைஇடத்தில்சுத்த
அறிவில்லாதவனைப்போலஅகப்பட்டுயான்
மோசம்போனதுஇனிமேலெனக்
குன்னடியைக்கிருபைசெய்திவ்வுலகந்தன்னில் (எனை)

அநுதினம்யானிந்தவல்வினைதீ
வினைகளென்னும்பயனுல்வருஞ்சுகத்தை
அனுபவித்துபோதும்இனிமேலுந்த
னடியேனுகச்செய்துஅம்புவியினில் (எனை)

பயங்கரமானமாதர்வலையிலகப்
பட்டுமதிகெட்டுவீணுய்ப்பகலிரவும்
மயங்கிபிருந்ததுபோதும்இனிமேலிந்த
மாய்கைக்குள்ளாகாமல்செய்திம்மானிலந்தனில் (எனை)

பணமென்றமதத்தாலேகண்ணிருண்டு
பாகவதர்கள்பாதத்தைப்பணியாமல்
குணங்கெட்டதினிபோதும்ஸ்ரீமத்பராங்
குசதாசானுகூலஇக்குவலயத்தில (எனை)

இ-ம்-பெகு-ஏகதாளம்.

பல்லவி.

ஸ்ரீமந்நாராயணுஹரியேதிக்கு.

அநுபல்லவி.

வேறில்லையென்றுனையே விரும்பித்தொழுதேன் (ஸ்ரீமந்)

சரணங்கள்.

தாயைப்போலேவந்தா தரியுமே-இந்த
தருணத்திலெனையாளத தடையேனுசிமூலமே
மாயானந்தகாரத்தையறுத்துமே-இந்த
மயக்கத்தினுலென் மதிமயங்குதென்செய்வேன் (ஸ்ரீமந்)

தஞ்சமென்றுனையடைந்தேன்-இந்த
தாணிக்குளுனக்கின்னந்தயவில்லையேனுவுந்தன்
கஞ்சவக்கஞ்சலிசெய்வேன் எந்தன்
காமவினைகளறுத்தென்கைப்பிடித்தாளும் (ஸ்ரீமந்)

பாசபந்தவிலென்னையே-தள்ளிப்
பேசாமலிருக்கின்றாய்பிறவியில்லாமற்செய்து
கோசலைகுமாராவுனையே-இப்போ
கோறிவந்தடுத்தேன்பராங்குசதாசனையாள் (ஸ்ரீமந்)

இ-ம்-முகாரி-அடதாளம்-சாப்பு.

பல்லவி.

உபயகாவேரிவாசனே உனையேநம்பினேன்
நானுனையேநம்பினேன்

அநுபல்லவி.

அபயஸ்தங்கொடுத்தாதரியென்னை
அரங்கனேகருடத்துரங்கனேஒ (உபய)

சரணங்கள்.

சப்தப்பிரகாயத்துக்குள்பள்ளிக்கொண்ட
ஜலஜநாபனே-ஓஜலஜநாபனே
பக்திகளெனக்களித்திந்தவேளையில்
பட்சம்வைத்தாள்ஜகத்ரட்சகனே (உபய)

தொல்லுலகத்திலெனர்தனிடகையைச்
சோரவிடலாமோகையைச்சோரவிடலாமோ
கல்லுக்குபிராணன்கொடுத்தவனேயென்னைக்
காருமேகருணைபாருமேஒ (உபய)

இருவினைகளையறுத்துச்சுகமா
இருக்கநீவரந்தா-நானிருக்கநீவரந்தா
அருமறைப்பொருளேயித்தரையில்
அன்புவைத்தாள்பராங்குசதாசனே (உபய)

இ-ம் - முகாரி - ஆதிதாளம்.

பல்லவி.

ராமாயிதென்கர்மமா உன்கருணை

அநுபல்லவி.

வராதிருப்பதுதர்மமா சீதாபிராமா

சரணங்கள்.

தாமசத்தாலேயித்தரணியில்நான்பொல்லாப்
பாமரனாகினே-னாதியுமுந்தன்
நாமத்தையுமெந்நாவினாற்புகழாமல்
நரகத்துக்காளாகினேன்சீதாபி (ராமா)

சாரஈனசம்சாரமென்னுந்துக்க
சாகரத்திலொண்டினேன்
சாயத்தைபோக்கவின்பாராமென்றேநம்பி
சரணமென்றுனையண்டினேன்சீதாபி (ராமா)

ஆறுதார்க்குணங்களாலடிபட்டுவீ
ணாகக்காலங்கழித்தேன்மகா
கோரபாபமானபாரத்தைநானேற்றுக்
கொள்ளவுடம்பெடுத்தேன்சீதாபி (ராமா)

பாதகர்முதற்பாதகனாகிப்பொல்
லாதகாதகனானேனல்லோ
ஆதரிப்பாரென்றுபாதத்தைவணங்குஸ்ரீ
நாதாவென்றோதினேன்சீதாபி (ராமா)

பாருலகத்திலுன்பாதங்களைப்
பணியாமலேதிரிந்தேன்ஸ்ரீமந்
நாராயணாவென்றுநம்பாமல்மதிகெட்டேன்
நாமத்தையுமறந்தேன்சீதாபி (ராமா)

கசமாலமான இக்காயத்தையெப்போபோக்
கடித்துக்கொள்வேனையனே-பராங்
குசதாசனையெப்போநிஜதாசனுக்குவாய்
கோதண்டராமய்யனே-சீதாபி (ராமா)

ஸ்ரீபராங்குசதாஸர் அருளிச்செய்த

இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

ஐயா எந்தனுக்கிரங்காய் எந்தனைப்பெற்ற-ஐயா.

அநுபல்லவி.

ஐயாமுக்திரிகைநீயேயென்கதி
மெய்யாயுரைக்கேனிதுபொய்யல்லவல்லவென் (ஐயா)

சரணங்கள்.

மாதாபிதாகுருஎன்னாதாரமானதெய்வம்
நீகாணுகையாலருள்தாதாதாதாவென் (ஐயா)
தீராப்பெருங்கவலையைத்தீராய்காரிராயன்
மாறுக்கெனக்குவேறாராராராராவென் (ஐயா)
நன்றாய்ப்பராங்குசனே உன்றாள்வணங்கினேன்மற்
றொன்றுமறியேனென்கிலேன்எண்ணெண்ணெண் (ஐயா)



இ-ம்-கமாசு-தாளம்.

பல்லவி.

ராமாநீயெந்தனைக் கைவிடலாமா
உந்தனுக்கிதுதர்மமா (ராமா)

அநுபல்லவி.

க்ஷேமகரத்திலெனைச்சேர்த்தணைத்துப்பிடித்துன்
நாமந்தனைநிதம்நாவினால்துதிக்கச்செய் (ராமா)

சரணங்கள்.

யாராகிலும்வேறுனைவிடகதியுண்டோ-எனையாளாமதிருப்பதில்
அனியாயமினியெங்கேயாகிலுமுண்டோ
பாருலகத்திலென்னைப்பட்சத்துடனேயாளும்
ஆருமற்றவனைப்போலலையவிடாதே-ரகு (ராமா)

கல்லாவுன்மனமென்றன்மீதிலிரங்காதா-ஐய்யோயின்னமென்றுரு
சொல்லாகிலுமுன்றன்செவியினுழையாதா
தொல்லுலகமதிலென்றன்துணையாயிருந்தெனக்கு
நல்குணமளித்தாட்சியுமென்னை-ரகு (ராமா)

கூவியான்முறையிடுவதைவந்துகேளாய்-பராங்குசதாசனு
கூலாயென்மனவாமதைக்கொடுத்தாளாய்
ஆவியென்னுடலைவிட்டகலுமுனமேயெந்தன்
பாவந்தனையறுத்துன்பத்தனாகச்செய்-ரகு (ராமா)

இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

ராமாவென்வினைப்போகாயே-பராங்

அநுபல்லவி.

தாமாநீயெந்தனைவந்தாதரிக்காயோ (ராமா)

சரணங்கள்.

நின்னடியென்றைக்குக்காண்பேனோ-உனக்
கின்னமுமென்மேல்கருணையில்லையிதேனோ
என்னபசாரம்பண்ணினேனோ-நீ
என்னையாளாவிட்டாலினியுன்னைவிடுவேனோ (ராமா)

கர்த்தனேரட்சிப்பவனாரோ-அரி
கீர்த்தனைபாடுமவன்மேலித்தனைபோரோ
பார்த்தவருன்னைப்பழியாரோ-ஓ
ஜநார்த்தனா இனியுனக்குநானென்னவேறோ (ராமா)

எந்தன்சொற்காதில்நுழையாதோ-நீ
என்னையாளாமலிருப்பதிதென்னசூதோ
உந்தன்மனமேனிரங்காதோ-ராமச்
சந்திரனேபராங்குசதாசன்மேலேன்வாதோ (ராமா)

இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

பல்லவி.

ராகவா என்முன்னுகவா.

அநுபல்லவி.

ராகவனேயென்னோட்சித்தருளும்-நீ
யேகதியென றுனாவெண்ணினேன்-ஓஓ

சரணங்கள்.

காரணுபரிபூரண
வாரணந்தனையேநீவந்துகாத்ததைபோலத்
தாரணிக்குள்ளேவந்தாதரி-ஓஓ (ராஜ)

கோபமோ இதென்னபாபமோ
ஆபத்தெந்தனுக்கணுகாமல்செய்கஞ்ச
நாபனேஉனேநம்பினேன்-ஓஓ (ராஜ)

காருமேகருணைபாருமே
நாறுமுடலொழித்துநாட்டிலுந்தனைக்
கோறும்வரந்தாபராங்குசநாமா-ஓஓ (ராஜ)

இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

ஓடிவந்தென்னையாளாதிக்
கொருவருமில்லைஸ்ரீமணாளா-உன்னைத்
தேடிக்காணுமல்லெவருநாளாய்-எங்கும்
திரிந்தலைந்தேன்மலர்த்தாளா (ஓடிவந்)

கொடும்பாவியாகையினலே-என்னைக்
கோபித்தால்உனக்கெந்தன்மேலே-நான்
படுந்துக்கமதையெவராலே-தீர்க்கப்
படுமுன்னையல்லால்திருமாலே (ஓடிவந்)

இன்னினத்திலென்கைவிடாதே
எந்தனைவிட்டப்பால்நாடாதே-இன்னம்
என்னுடனீவாதாடாதே-அரியே
எனக்கிழிவுபடாதே (ஓடிவந்)

ப்ரரிலுனேயேநம்பினேன்-ஆசா
பாசமறச்செய்வாய்சீமானே-இப்போ
கோரிவந்துன்னைப்பணிந்தேன்-பராங்
குசதாசன்தனையாட்கொள்வானே (ஓடிவந்)

இ-ம்-முகாரி-அடதாளம்.

பல்லவி.

ஓடிவாருமையா-என்முன்னேடிவாவா-உன்னை.

அநுபல்லவி.

தேடிக்காணுமல்லலைகிறேனதேவதேவா

சரணங்கள்.

என்னையாளாவிட்டாலினி உன்னைவிடுவேனோ-ஒ
பன்னகசயனாவுன்கிருபைவராதேனோ ஓடிவா

காருமிந்தவேளையென்னைக்கமலக்கையனே-வரந்
தாருமுன்கருணைக்கண்ணால்பாருமையனே ஓடிவா

தொல்லுலகந்தன்னிலென்னைசோரவிடலாமோ-இந்த
சல்லியங்களென்றைக்குமென்றனைவிட்டுப்போமோ ஓடிவா

இன்னமுமென்மீதுனக்கிந்தவாதா-உந்தன்
பொன்னடிதந்தென்வினைதயப்போக்கலாகாதா ஓடிவா

ரட்சியுமுன்பாதத்தைநம்பினேனையா
தட்சணப்பராங்குசதாசனையாளையா ஓடிவா

இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்

பல்லவி.

கோவிந்தமாதவகோபாலகேசவா

அநுபல்லவி.

கோவிந்தனேயென்றுகூவியழைத்தேனென்
பாவந்தனையேநீக்கிபாலனஞ்செய் ஓநாதா

சரணங்கள்

முன்னேயனேசருக்குமுத்தியளித்ததைப்போ
லன்னையாகியிப்போதென்னைரட்சிக்கொண்ணுதா கோ

உந்தனிடபாதாரவிந்தமதைநம்பினேன்
இந்தவேளையிலென்னைவந்தாதரிக்கொண்ணுதா கோ

ஈசன்வணங்குஞ்ஜெகதீசாஸ்ரீபராங்குச
தாசன்தனக்குவரந்தந்தாளவொண்ணுதா கோ

இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

பல்லவி

அரியேயெனூழ்வினைகள்தீர்த்தரியே-உன்னை
விடவேறியேன் அரியே

### அநுபல்லவி

அரியேயுன்னைவிடப்பிரியேனுன் - சின்னஞ்
சிறியேன்வேறொன்றையுங்குறியேன் அரி அரி

### சரணங்கள்

அதிபிரியத்துடன்ஸ்ரீபதியுன்றிருவடியை
கெதியென்றநுதினமுமனதிலெண்ணினேனரி — அரி

நரகக்குழியில்விழுந்துருளும்படிசெய்யாதே
அருமறைப்பொருளேஉன்னிருபாதமருள் — அரி

தீங்குகளென்னைவிட்டுநீங்கும்படிச்செய்தென்னை
பாங்குடன்ரட்சியும்பராங்குசநாமா அரி — அரி

### இ ம் - முகாரி - ஆதிதாளம்

### பல்லவி

என்பிராணநாதா எனக்கினி
உன்பாதம்தா தா

### அநுபல்லவி

நின்மலமன்றிபிலம்புவியில்வேறேயான்
நம்பினதுண்டோ ஜெகன்மோகா - இனி
என்பங்கிருந்தென்துன்பமதைபோக்கிநீ
அன்புடனாளக்கவா அரி அரி — என்பிரா

### சரணங்கள்

இந்தத்தரையிலென்னையடுத்தவனெனதுபேர்
பெற்றதைஇதையறியாயோ - இனி
சித்தமிரங்கியென்காத்தாலேயெங்கும்பிர
சித்தமேயென்னையாளா அரி அரி — என்பிரா

என்னையாண்டருள்யென்மன்னவனேயுந்தனுக்
கின்னமுமனமிரங்காதாமுன்
சொன்னசொல்மறந்துநீபின்னுக்கொளித்தாலினி
உன்னையுலகம்பழியாதோ அரி அரி — என்பிரா

பாசமாய்மனக்கிலேசத்தைபோக்கியென்
ஆசையைத்தீர்ஜெகதீசா இனி

மோசஞ்செய்யாமல் அந்தஸ்ரீபராங்குச
தாசஇருதயமலர்வாசஅரி-அரி என்பிரா

இ-ம்-சாவேரி-ஆதிதாளம

பல்லவி.

இன்னமுமென்மீதிலேன்கிருபையில்லை
நானென்செய்குவேன்நா அரியே.

அநுபல்லவி

அன்னையுந்தந்தையென் றுன்னையேநம்பினேன்
ஆதரிஒநா அரியே இன்ன

சரணங்கள்,

இப்புவியிலுந்தனடியார்க்கடி
யாகவருளும் அரியே இன்ன

துன்பவினைகளறுத்துன்பாதங்களைச்சேர்ந்தென்னை
சுகமுடனிருக்கச்செய்-அரியே இன்ன

இங்ஙனேஓடிவந்தென்துயரமதை
விலங்கச்செய்யுமோநா அரியே இன்ன

பொங்கமாயுன்னைபோற்றினேன்நீயெந்தன்
டங்கிலிருமோநா அரியே இன்

இந்தஜனனமடியேனடிக்கடியினி
யெடுத்திடாமல்செய்நா அரியே இன்ன

எந்தனுக்குன்பதமீவதற்குன்னரு
ளின்னமேனில்லைநா அரியே இன்

மடுவினில்கரிதனையாளாமலாண்டவர்
மன்னித்தருளும்நா அரியே இன்ன

கொடுமென்வரந்தனைக்கோபமேமுனக்கேனிந்த
கொடுமைக்கென்செய்வேன்நா அரியே இன்ன

காமாந்தகாரத்தைகட்டோட்டறுத்தயினி
காருமெந்தனைநா அரியே இன்

ஸ்ரீமத்பராங்குசதாசனேஉனையல்லால்
திக்குவேறில்லைநா அரியே இன்ன

ஸ்ரீபராங்குசதாஸர் அருச்செய்த

இ-ம்-மத்தியமாவதி-ரூபகதாளம்.

பல்லவி-

வந்தேனையாளாய் மாமணவாளா

அநுபல்லவி.

இந்தமட்டுமென்மேலே இருந்ததுமபோதும்மாலே வந்த

சரணங்கள்

உன்னடிதாதாஒரடிநாதா
என்னஜாலமினிமேலென்குலதெய்வமே வந்தே

சாணாரவிந்தசுவாமிமுகுந்தா
தருணமிதுவேபரதசாக்குமாரா வந்தே

பரனேஸ்ரீராமாபராங்குசநாமா
திருவேங்கடதாதாசாரியர்திருவடியானேனையா வந்தே

. இ-ம்-பியாகு-ஆதிதாளம்

பல்லவி.

இனியிப்பிறவிவேண்டேன் அரியேஎனக்கு

அநுபல்லவி,

இனியிப்பிறவினல்லதுவாகிலுமெந்தனுக்
கினிப்புண்டோயிதையோதும்
மனிதருடன்ஜெனித்திருந்ததுபோதும்
ஆகையாலெனக்கு இனியிப்

சரணங்கள்

பெண்பிள்ளைகளாலினிக்கண்டுகொள்வதேதாகிலு
முண்டோவெனக்கிதையோதும்பூமண்டலத்திற்
கண்ட அதிசயம்போதும்
ஆகையாலெனக்கு இனியிப்

அஷ்டயிஸ்வர்யத்தினால்ப்ரதிஷ்டையேதாகிலுமுண்டோ
இஷ்டத்துடனிதையோத வுஷ்டமத்தாய்
கஷ்டப்பட்டதினிபோதும்
ஆகையாலெனகரு இனி[illegible]

பாசபந்தங்களாலொருபலனுண்டோபராங்குச
தாசன்தனக்கிதையோதும்மூவாசையினால்
மோசம்போனதினிபோதும்
ஆகையாலெனக்கு இனியிப்

இ-ம்-கலியாணி-ரூபகதாளம்.

பல்லவி

என்னஜாலம்என்னையாள்செகதீசா

அநுபல்லவி

உன்னிருதாளை நம்பினேன் என் வினையறுக்க
பன்னிருநாமனே தயைபார் இப்பாரினில் என்ன

சரணங்கள்.

இக்கட்டுவெந்தென துசங்கட்டந்தனையறுக்க
வெங்கட்டரமணுமனம்வைஇப்பாரினில் என்ன

துர்க்குணங்களைப்போக்கிநற்குணமெனக்களிக்க
பார்த்திபர்க்குமைத்துனகிருபையார்இப்பாரினில் என்ன

இ-ம்-கலியாணி-ஆதிதாளம்.

பல்லவி.

நம்பினேன்திருவல்லிக்கேணிநாயகாவுன்னையே,

அநுபல்லவி.

நம்பினேனினியெனக்குன்
செம்பொன்னடியையருள்ஓ
அப்புவியையோரடியளந்தோனே நம்பி

சரணங்கள்.

இத்தரையிலுன்பதத்தைநத்தினவர்துய
ரத்தினையேயொருநொடிக்குள்போக்கடித்தேன் நம்பி

அக்கரியைமடுவினில்சிக்கினபோர்தக்காரவை
சக்கரத்தைவிட்டுமுன்சம்மரித்தோனே நம்பி

வஞ்சககௌரவாளெதிர்அஞ்சலிசெய்ததிரௌபதை
சஞ்சலமகற்றிதுகிலளித்தோனே நம்பி

தீங்ககலச்செய்தனவைவைத்தாக்கிநீபாக்குடனே
...க்குசதாசனேவந்தாள்வோனே நம்பி

இ-ம்-அசாவேறி-ஆதிதாளம்.

பல்லவி.

ஜென்மமெடுத்ததுபோதும்நாஜென்மம்

அனுபல்லவி.

ஜென்மப்பிணிகளெக்கின்மைப்படுத்தினி
உன்மலரடியருள் ஒமுர அரியே — சென்ம

சரணங்கள்.

கிலத்தைதயோரடியில்கின்றளந்தவனே-இவ்
வுலகத்தில்சலந்தனில்எண்பதுலட்சம் — சென்ம

பட்சிவாகனனே விப்பாரினில்பலவித
விருட்சசாதிகளில்இருபதுலடசம் — ஜென்ம

அரக்கர்படைகளை வேரறுத்தவனே-புவியில்
இருக்கும்பட்சிவகையில்ஈரைந்துலட்சம் — ஜென்ம

கோறினவரந்தனைக்கொடுக்குந்தயாபரா-இப்
பாரினில்புழுபூச்சியில்பதிெருலட்சம் — ஜென்ம

அருமறைமுறையிடுமவனே இத்தரணிக்குள்
மிருககூட்டங்களில்முப்பதுலட்சம் — ஜென்ம

பரமபாகவதர்கள்பணிபவனே-தரையில்
நரமனுஷரூபமாய்நான்குலட்சம — ஜென்ம

இந்தபடியாகவேயெண்பத்தநாலுலட்சம்
ஜெந்துசீவராசியில்திரும்பச்செய்யாதேயினி — ஜென்ம

ஒவ்வொருயோனியில்ஒருகோடிதரம்பிரந்
திவ்விதமாயலையளந்தனுவில்லேயினி — ஜென்ம

அம்புவிதனிலேவரும்பிறவியறச்செய்
நம்பினேனின்னின்றனையேபராங்குசநாமா — ஜென்ம

இ ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

மோசஞ்செய்யாதேராமாயென்னை.

அனுபல்லவி,

ஆசையுடனேநானுனையேவந்
தடுத்தேனென்னையாளரியே

சரணங்கள்.

மைந்தன்மீதில்வர்மமா மன
வாந்தரவேபரந்தாமா-நீ
எந்தன்கைவிடலாமா- இகி — மோசம்

## அரிபஜனைக்கீர்த்தனை.

என்னுடனேஇந்தவாதா-யீ
ரேழுலகமும்பழியாதா
இன்னமேன்தயைவாராதா-இனி
என்னசெய்வேன்ரகுநாதா மோசம்

பாபம்வாராததினாலே-இனி
பட்சம்வைத்திடும்மென்மேலே-இந்த
சோபமுனக்கென்னத்தினாலே-பராங்
குசநாமாநெடுமாலே மோசம்

இ-ம்-கரகரப்பிரியை-ஆதிதாளம்

பல்லவி

நேரேவாரும்ஓரகுநாதா எந்தன்நேரே.

அநுபல்லவி.

நேரேவாருமையாயென்னேரேவாருமையாயென்
நேரேவாரும்ஓரகுநாதா

சரணங்கள்

பாழானநரகத்தில்வீழாமலடியேனை
பட்சம்வைத்தாளும்ரகுநாதா நேரே

ஊழ்வினைகளெனைவந்தொட்டாமலுதவிசெய்
ஏழையைக்காரும்ரகுநாதா நேரே

அரியாதவனைவந்தாதரியாமலிருப்பது
சரியாவுனக்குரகுநாதா நேரே

அரியேயாதரியென்றழைத்தாலுஞ்சும்மாயிருப்ப
தழகாவுனக்குரகுநாதா நேரே

ஏனோவித்தனைகோபமேனோவிட்டுவிடு
வேணுஉந்தனைரகுநாதா நேரே

ஆனாலுமென்கொடுமையனியாயமனியாய
மாருடன்சொல்வேன்ரகுநாதா நேரே

இன்னமென்மீதிலுனக்கென்னவர்மமேனோ
வொன்றுமறியேன்ரகுநாதா நேரே

உன்னையன்றிஉலகில்என்னைரட்சிக்குங்கர்த்த
ரின்னமாரையாரகுநாதா நேரே

தாசரடிமலரைப்பூசிக்கும்பராங்குச
தாசனையாளும்ரகுநாதா நேரே

ஸ்ரீ பராங்குசதாஸர் அருளிச்செய்த

இ-ம-பியாகு-அட தாளம்;

கண்ணிகள்.

அபயாஸ்தங்கொடுத்தாதரியென்
னையாமலக்கையா
அடியேனண்டையில்குடியிருக்குமவ்
வசுரர்தலையைகொய்யா
உபயதிருவடிகளேகெதியென்
றுனையேநம்பினேனெய்யா
ஒடிவந்தென்மனக்கவலையை
உருண்டோடியபடிச்செய்யா — அபயஸ்

தீவினைகளால்வருமிடர்களைத்
தீராய்ரகுவீரா
கீழ்நரம்புதோலெலும்பால்கூடின
செனனமரக்கண்பாராய்
பாவியென்றேபேரெடுத்திடாதுன்னை
பற்றியிழுத்தென்னைக்காராய்
பகலிரவுமுனைநினைத்தவருள்
பாராளந்தகெம்பீரா — அபயஸ்

கனவிலுமுனைமறவேனென்முறை
கேளாயென்னையாள்
கேடில்லாவாழ்வைக்கொடுத்தினி
கிருபைசெய்ஸ்ரீமணவாளா
தினமணபெண்பொருளாசைக்குள்சிக்கினான்
திரிந்தேனித்தனைநாளாய்
தேடிக்கொண்டேனுனைக்காணும்வழியை
சித்தம்வைமலர்த்தாளா — அபயஸ்

காலமின்னம்வரவில்லையோசன
காமாகனஸ்யாமா
காமவினையின்பயனோஇத்தையான்
காண்கிலேன்ரகுராமா

சாலஞ்செய்ய தகா(ஏ)தனக்குண்ணடி ௨௮.
தரயினித்தடையாம இத்
தரைக்குள் வசிக்குப்பராங்குசதாசன்
செயித்திடும்திவ்வியநாமா அபயஸ்

இ-ம்- அசாவேரி - அபுருபம்- ஆதிதாளம்.

பல்லவி.

வாவாசீதாமணாளா-வாவா- நீனதயாளா

அனுபல்லவி,

வாவாசெம்மலர்த்தாளா வாவாவந்தெனையாளா

சரணங்கள்.

வாவாகாருண்யகாரா வாவா பத்தவதாரா
வாவாவேதாந்தசாரா வாவாவந்தெனைக்காராய் வாவா

வாவாதிருவரங்கா வாவாநீலமேகாங்கா
வாவாதிருவரங்கா வாவந்தெனையாள்பங்கா வாவா

வாவாசெகத்பிராமா வாவாபராங்குசாமா
வாவாவென்பரந்தாமா வாவாவந்தெனக்காவாய் வாவா

இ-ம்-பைரவி-ருபகதாளம்.

பல்லவி.

வாவாமணவாளா என்னிடர்தீர்க்க
வாவென்னைக்கைவிடலாமா

அனுபல்லவி.

தேவாநீயென்றுன்சேவடியைப்பிடித்தேன்
சித்தம்வைத்தாள்பரந்தாமா

சரணங்கள்.

துன்பக்கடலெனுமாசுழலையிற்றள்ளி
துயர்தனைக்கொடுத்திடலாமா
உன்பாதந்தன்னை விரும்புமெளியேனை
ஓடிவந்தாள்பரந்தாமா வாவா

சாமக்கருங்குழியைவெட்டியிப்படியென்னை
கஷ்டப்படுத்திடலாமா
தாசமில்லாமல்தாசரதேவுன்மலர்த்
தாள்கொடுத்தாள்பரந்தாமா வாவா

கோரசம்சாரவிகாரத்திலுலமனம்
கொதிக்கும்படிசெய்திடலாமா

பாராவென்னைபாலிக்கவன்மேலகண்
பார்த்தினியாள்பரந்தாமா வாவா

இச்குவலயந்தன்னிசதிக்கில்லாசவனைப்போ
லென்னையலையவிடலாமோ
திக்குநீயென்றேன் இக்கணந்தனையேநச்
செய்தாட்கொள்ளுபரசதாமா வாவா

கர்மவினைகளைப்போக்கிக்கர்த்தனேயென்னையினி
காராமலிருந்திடலாமா
சென்மநோயறச்செய்துதனைதனில்பராங்குச
தாசனையாள்பரந்தாமா வாவா

இ-ம்-மத்தியமாவதி-ரூபகதாளம.

பல்லவி.

வாவாஸ்ரீராமாவரஜாலமாமா வாவா

அனுபல்லவி.

பாவமறநீதயைபாராய்யென்நோய்
அரசனுக்கதிபதியேநீயெனை

சரணங்கள்

அரசனுக்கதிபதியேநீயெனை
யாண்டருளெனைமறவாமலேமேனிபிற்
கரதூஷணர்முதலோரை யொர்
கணையால்வதைசெய்தவனேயென்னேராய் வாவா

நிச்சயமாயுனைநம்பினேனல்லவா
நின்னடியைத்தடையேயின்றியருளினி
பச்சைவண்ணனெப்புவிதனிலேயான்
படுந்துயரதுதனைத்தீர்க்கவென்னேராய் வாவா

அருமறைகளுமுறையிடுபாதனே
அருளாய்தங்கிதிருவேங்கிட
குருசரணமேகதியென்றடைந்தேன்பராங்
குசதாசன்பணிநாதாயென்னேராய் வாவா

இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி-

வரத்தைக்கொடுக்கக்கரிவரதராஜரே-இங்கே
வாரும்வாரும்வாரும்

அனுபல்லவி

கருணாகரனேயுந்தன்சரணத்திலிருந்தசக்
கரங்களைக்குறித்திதோசரணமென்றடைந்தேன் வரத்

ஆலிலைமேல்பள்ளிக்கொண்டருட்நீலமேகஸ்யாமா என்னைப்
பாலிக்கப்போகாதோ கோபாலலீலா
சாலஞ்செய்யாமலேயாதிமூலமென்றடிக்கடி-
ஓலமிட்டழுதபரிபாலனஞ்செய்தவனேயென் வரத்

உத்தமராமையாமையனே நானுந்தனையாய்வேண்டினாலும்
சித்தமிரங்காதோ அரிபக்தானுகூலா
நத்தியுன்சேவடியைப்பத்தினவன்மீதிலுனக்
கித்தனைபாராமுகமா சத்தியசொரூபனேயென வரத்

வாசவன்பணியும்ஸ்ரீநிவாசனே அயோத்திநகர்
வாசதீனபோஷா குருவோஸ்ரீநிவாசனே
பாசமாய்ரட்சியும்நேசனே ஸ்ரீபராங்குச
தாசன்மனோவிலாசனேயுனைநான்கேட்ட வரத்

இ-ம்-பியாகடை-சாபுதாளம்

பல்லவி

இன்னமென்னையாளாமலிருப்பது
என்னகாரணம்ராமையா

அநுபல்லவி

முன்னேயனேகரையாண்டவனென்றுன்னை
உண்மையாய்நம்பினேன்மெய்யா
இதுபொய்யாமலர்க்கையா இன்ன

சரணங்கள்

தெரிந்துதெரியாமற்செய்தகுற்றங்கள்
க்ஷமித்தென்மேல்கிருபைபாராய்
வரந்தருவாய்ரகுவீரா இன்ன

கடுவினைதீர்த்துக்காலத்திலேயென்னைக்
காத்துரட்சிக்கப்போகாதா
இன்னம்வாதாஜெகந்நாதா இன்ன

ஆசாபாசங்களறச்செய்துன்பொன்னடி
யருளும்ஓசக்ரவாளா
என்னையாள்ஸ்ரீ ஞளா இன்ன

இந்தப்புவிக்குளென்மனமிராங்
காதிருப்பதீதென்ன
மணிவண்ணாகமலக்கண்ணா இன்ன

சோமசேகரன்துதிக்கும்பராங்குச
நாமாயென்கைவிடலாமா
என்னைக்காமாபராந்தாமா இன்ன

இ-ம்-காம்போதி-ஆதிதாளம்

பல்லவி.

சரணம்சரணமெய்யா-கோதண்டராமையா-சரணம்

அனுபல்லவி.

சரணாகதியென்றும்தாசஜனங்களை
காருநீயருளும்கரிகணபதிவரதாவா சரண

சரணங்கள்

தப்பிதங்களென்மீதில்கொடாமலே
தயவுடனுளும்சயாபராபுவிமேலே
எரும்புறவியெனக்கினிமேல்வாராமலே
என்னைநீயாட்கொண்டருள்வாய்நெடுமாலே சரண

மனதின்குறையைநீக்கவாவென்றிருந்தேனே
மகிழ்ந்திருப்பதென்னமகிமைநானறியேனே
தனதானியங்களைத்தரணியிலேவேண்டேனே
சார்வதாஹரிபக்திதாவுலகளந்தோனே சரண

தீவினைகளைத்தீர்க்ககாலஞ்செய்யாதேராமா
தினமும்நான்சஞ்சலப்படும்படிவையாதே
பாவியானென்றுபள்ளத்திற்றள்ளாதே
பட்சம்வைத்திடும்பராங்குசதாசன்மீதில் சரண

இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்

பல்லவி

வாரும்ஓஹரியேயெந்தனையாள்
வைகுண்டத்துக்கதிபதியே

அனுபல்லவி.

வாரும்மென்னைரட்சிக்க
வாசுதேவர்ஓடியிங்கே வாரும்

சரணங்கள்.

என் துயர் தனை தீர்க்க
இம்மை தனிலோடிங்கே வாரும்

துன்ப வினையறுக்க
சுருக்காயென்னோடிங்கே வாரும்

டக்கத்துணையிருக்கப்
பட்சத்துடனோடிங்கே வாரும்

தாரணிக்குள் பாராங்குச
தாசன் முன்னோடிங்கே வாரும்

இ-ம்-காபி-அடதாளம்.

பல்லவி.

தாசரதே ராமா தயை யென்மீதில்லையா.

அநுபல்லவி.

தாசாதியே தயாநிதியே
பாசமறச்செய்ஸ்ரீபதியே பூபதியே

சரணங்கள்.

ஆதிதேவனே ஹரிராகவனே
ஆதிமூலமென்றோதின ஆனையைக்காத்தவனே தாச

கருணாகரனேச்கரிவரதனே
பிரியமுடனே ஸ்ரீஹரியென்ற பாலனைக்காத்தவனே தாச

நாராயணனே பரிபூரணனே
மராமராவென்றவனை மகாமுனியாய்ச்செய்தவனே தாச

கமலக்கையா காருமையா
ஏமன்வந்தென்னை தொடாமலென்னையாளுமையா தசா

தரணிகாதா தசாவதாரா
பாராங்குசதாசன் பணியும் சொற்பாதவினோதா தசா

இ-ம்-நீலாம்புரி-சாப்புத்தாளம்.

கண்ணிகள்.

இன்னமென்மீதில் ஏனிந்த வர்மமோ
நானேதுமறியேன் அரியேன் அரியே இன்னம

## ஸ்ரீபராங்குசதாஸர் அருளிச்செய்த

என்னேரமுனதுபொன்னடியில்தியானமிருக்க
வரந்தரும்நர அரியே — இன்னம்

இருவினைகள்வந்தென்னைத்தொடாமல்செய்துன்
திருவடிதாரும்நர அரியே — இன்னம்

சிறுவன்மேல்பிழைபொறுத்தாளாவிட்டாலினி
யாரெனக்குநர அரியே — இன்னம்

ஓயாக்கலைச்சாகரத்தனிலேவீழ்ந்
துருளுவதழகாநர அரியே — இன்னம்

தாயாகிநீவந்தென்னைதற்காத்தருளுமிந்த
தருணத்திமகாலட்சுமிநர அரியே — இன்னம்

தப்பானசமுசாரத்துயரத்தையெப்போ
தொலைத்துவிடுவாய்நர அரியே — இன்னம்

இப்பாரினிலுன்றன்தாசர்க்குதாசனாய்
இருப்பதெப்போநர அரியே — இன்னம்

பாதாரவிந்தம்பணிந்தேன்பராமுகஞ்செய்
யாதேரட்சியும்நர அரியே — இன்னம்

தினமுமென்மனஞ்சிதறும்படிச்செய்தால்நான்
செய்குவதென்னநர அரியே — இன்னம்

என்னாலாகாதுஇத்தேகத்தைசுமக்க
தயைவைத்தாளும்நர அரியே — இன்னம்

சொன்னதெல்லாமுன்செவிகேட்கவில்லையோ
இதென்னஆச்சரியம்நர அரியே — இன்னம்

அன்னையச்சுதனேபெத்தனைவீணா
யலையவிடாதேநற அரியே — இன்னம்

சன்னபிணியெடாமலேசெய்துபராங்குச
தாசனையாட்கொள்நர அரியே — இன்னம்

இ-ம்-நாதநாமக்கிரியை. ஆதிதாளம்

பல்லவி

ஊழ்வினையைத்தீரா ஓ ஓ ரகுவீரா.

அநுபல்லவி.

பாழுடலெடுத்துப்பட்டபாடுபோதுமையாநீயென் — ஊழ்

சரணங்கள்

இந்தமட்டும்மண்மீதிலிருந்ததுபோதாதா
வந்தாட்கொள்ளத்தடையென்னசொல்வானோர்
பரந்தாமாயிருதயத்தினால்கட்டுப்பட்டதுபோதுமென் ஊழ்

சம்சாரத்திலிருந்துயான்தத்தளித்ததுபோதாதா
சம்சாரியேயென்மேலுன்கண்பார்க்கலாகாதா
இம்சைபடவென்னாலினியில்லைஎந்தனையா[illegible]ன் ஊழ்

சிறுசந்தோஷங்களைக்கண்டுயான்திரிந்ததுபோதாதா
பெருநாட்டதிபதியேநீயென்பிழைதீர்க்கலாகாதா
குருவேலதி[illegible]ன்றேன்பராங்குசதாசன்சொற்கருள்தந்து()

இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

பல்லவி.

ஐயனேரகுராமாஎனக்குன்பொன்
னடியைதந்தெனையாளா-இந்த

அனுபல்லவி,

வையகந்தனின்மீதிலிருந்துநான்
வாழ்ந்ததுபோதுமினிமேல் ஐயனே

சரணங்கள்,

கோபாலசாமிஎன்றனக்குசத்
பதவியருளினதைப்போல்
ஆவலுடனேயுன்முன்னேடிவந்தேன்
னிடரைப்போக்காய் ஐயனே

குஞ்சரந்தனைக்காத்தஸ்ரீமந்மு
குந்தவாபரந்தாமா
வஞ்சனைமதியையென்மேலென்னுமல்
வந்தெனையாண்டருளவாயே ஐயனே

பிணவிருந்திட்டுத்துதிசெய்யவல்லசூரனை
பெருநிலத்தில்வைத்தோனே
க்ஷணப்பொழுதுமறவேன்-என்றுயர்
தனைவிப்பவேதீர்ப்பாய் ஐயனே

அண்டிக்கொழுதேனுனையே-சகலவுல
குண்டுமிழ்ந்தஸ்ரீஹரியே

எண்டிசைகளுமறியதயையளித்
தென்னைப்புவியிலாளாய் ஐயனே

திருவேங்கிடதாதாசாரியர்
திருவடியாஸ்ரயித்தேன்
மறுசெனனமில்லாமற்கிருபைசெய்ஸ்ரீ
மத்பராங்குசநாமா ஐயனே

இ-ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.
பல்லவி

அரி அரி அரி அரி அரி அரி
என்னை வந்தாதரியே அரி

அனுபல்லவி

சிறியேனுன்னையல்லாமல் இனிவேறறியே
னரியேன்வேறறியேன் ஹரி

சரணங்கள்

எனக்குன்பாதமளிக்கவினி
உனக்கேன் மன்மிரங்காசா
மனசகவலைதீர்க்காமலிருப்பது
மாதவா இதென்னசூதா ஹரி

காமவினைகளறுத்தான்கருணைக்
கண்ணாலென்னையேன்பாராயோ
நிர்மலங்காதிராமாராயாபீதம்
தினைக்கவரந்தாராயோ ஹரி

எந்தனுடலையொழித்ததன்பாதார
விந்தமெப்போகாணுவனோ
இந்தப்புவிக்குள்பராங்குசதாசனோ
டிர்தவாதுனக்கேனோ ஹரி

இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்
பல்லவி

நீதயவாயாளாய்-இத்தரையினில்நீதயவாயாளாய்

அனுபல்லவி

நீதயவாயாளாய்நரசிங்கனே
கின்னடிநம்பினேனநிர்மலரங்கனே

சரணங்கள்

அம்புவியினிலென்னைடேவாதாடாதே
ஆருமற்றவனைப்போலலையவிடாதே

ம்புமெளியவனைக்கிழிவுதேடாதே
ாராயணனெனைவிட்டப்பால்நாடாதே நீதய

உன்னடியார்களுக்கடியேனுயர்க்கு
ஓடிவந்தேன்துயரமதைநீக்கு
பன்னகயசனமுன்பாவத்தைப்போக்கு
பாரிலுனைவிடவேறிலலேதிக்கு நீதய

நித்தியமுனக்குநினைக்கவரந்தருவாய
நேரிடுமிடர்களைபபோக்கியெனைகாராய்
சித்தம்வைத்தென்மனக்கவலையைதீராய்
திககுவேறில்லைபராங்குசவதாரா நீதய

இ-ம்-பைரவி-ஆதிதாளம்

பல்லவி

அரியேயுனைக்காண்பதெப்போ-இந்த

அநுபல்லவி

அவனிக்குள்ளேநீவந்தாளுவதெப்போ ஹரி

சரணங்கள்

தீவினையகற்றுவதெப்போ-ஓடி
திரியுமெனமனதைநீதிருத்துவதெப்போ ஹரி

நாவினால்ஹரியெப்போ-எந்த
ஞவியுன்ஞதீனமாயாவதெப்போ ஹரி

உன்தாள்வணங்குவதெப்போ-இந்த
இல்லறத்தாசையைவிட்டோடுவதெப்போ ஹரி

நாறுமுடலொழிப்பதெப்போ-வந்த
நற்கெதியடையும்வழிதேடுவதெப்போ ஹரி

கோறும்வரந்தருவதெப்போ-பராங்
குசதாசன்தனைநீயாண்டுகொள்வதெப்போ அரி

இ-ம்-பியாகு-ஆதிதாளம்.

பல்லவி

வந்தாதரியுமே அரியே-எந்தனை-நீ-வந்தாதரியுமே

அனுபல்லவி

வந்தாதரியும்கோவிந்தாரட்சித்துவரந்
தந்தாளுமேகஜகனையெனையேநீ

நாதா-கல்லைப்பெண்செய்பாதர் அடியார்க்கருள்
போசா-நற்கெதியைநீதா தா-இப்போதெந்தனை வந்

கேளா-யென்சொல்லைமலர்த்தாளா ஜானகிம
ணாளா-சுருக்காயெனக்காளாக்கிக்கொள்ளெந்தனை வந்

வாராயெந்தன்மிதில்தயைபாராய்- இருவினையைத்
தீராயெனக்குன்பதம்தாரா-யினியெந்தனை வந்

கார்க்கவணங்குமிராமா மென்கைவிடலமா-இவ்
வர்மமுனக்காமா-இப்போயெந்தனை வந்

மோசஞ்செய்யலாமாவென்னைரட்சியும்ஜெகதீசா
ஸ்ரீபாரங்குசதாசாவதாராவினி வந்

நாமாவளி

ராமாநுஜனேதெய்வம்
நாமெல்லோரும் துதிசெய்வோம்
காமக்குரோதம்மோகமாய்கைகளையறுத்து
க்ஷேமக்கரமளித்தெமன்பயம்போக்கிய

இ-ம்-மத்தியமாவதி-அடதாளம்.

பல்லவி.

பாலன்செய்ஸ்ரீமத்பட்டாபிராமனே
பன்னிருவர்நாமனே

அநுபல்லவி

ஜாலமென்னவென்னையாள் இத்தாணியில்
தசரதன்றனக்குமைந்தனுதித்தவனே பாலன்

சரணங்கள்

என்றுமுடலைவிட்டுயிர்போகுமுன்னே
உனைக்காணும்படிசெய்யுமே
யானந்திகாரத்தில்வந்திருப்பதுனக்கு
நியாயமோவிதிவிகஞானசோதிமயமே பாலன்

தஞ்சமென்றேரைக்காக்கும்சயாபரனேயென்று
சரணமென்றுனையடைந்தேன்
அஞ்சாதேநீயெனக்காதரவுசொல்லி
அன்புவைத்தாட்கொளவாய்ராகவனே பாலன்

ஏமன்வந்தெனைத்தொடாமலுன்பாதமருளு
இத்தரணியில்வேறறியேன்

க்ஷேமமாகவேபா[illegible]ளையாளும்
தேவனேகைகுவி[illegible]துரையே பாலன்

இ-ம்-[illegible]தாளம்.

பல்லவி.

பேசலாகாதா-ஓராமா-நீபேசலாகாதா

அனுபல்லவி,

பேசலாகாதாரங்கேசஸ்ரீவைகுண்ட
வாசுதேவாவென்னோடொருவார்த்தைகலந்துநீ பேச

சரணங்கள்,

பட்சிவாகனனேரட்சியும்ஜெகரட்சகனாரணனே
லட்சாதின்னரன்கலட்மீசமேதராய்
பட்சமாகவந்தேன்இச்சைதீறவென்னோடு பேச

சங்குசக்ரேசாபங்கயத்தவன்வணங்கும்பிரகாசா
செங்கண்மாலரியேநீஇங்ஙனேவந்தெந்தன்
சங்கடங்களையெல்லாம்விலக்கச்செய்தென்னோடு பேச

இன்னமென்மீதுஉந்தனிடம்யேனோவாது
அன்னையுந்தந்தையென்றுன்னையேநம்பியிருக்க
யின்னிலந்தனில்வந்தென்னோடொருவார்த்தை பேச

சுந்தரனே-வந்திடும்-ராமா-சந்திரசுந்தரனே
சிந்தித்தவடியார்முனுகந்துரட்சியுங்கோ
விந்தாமுகுந்தாவென்றுந்தனையழைத்தாலும் பேச

சத்யசந்தனனேபராங்குசதாசனுக்கு
பத்தியுடனேசபரிதின்றுருசியைப்பார்த்து
வைத்தகனியையுண்டுமுத்தியளித்தோனே பேச

இ-ப்-புன்னாகவராளி ஆதிதாளம்

பல்லவி

இன்னமுமென்மீதிலுனக்

அனுபல்லவி

கென்னவர்மமோ-சீதாராமையனே-ஓராமையனே இன்ன

சரணங்கள்

நன்னயமாயென்னிருகண்
ணாரவுன்னைக்காண்பதெப்போராமையனேஓராமையனே இன்

இருவினையறுத்து இந்தஇகத்தினில்
பிறக்காமல்செய்ராமையனேஓராமையனே இன்ன

குருவினுக்கினைப்படியின்
திருவடியைநம்பினேன்ராமையனேஓராமையனே இன்

எத்தனையாய்வேண்டினும்
பத்தமிரங்காதென்னராமையனேஓராமையனே இன்ன

இத்தனைகோபமாயென்மேல்
என்குலதெய்வமேஸ்ரீராமையனேஓராமையனே இன்ன

வாரணந்தனைக்காத்ததைப்போல்
வந்தனைரட்சியும்ஸ்ரீராமையனேஓராவையனே இன்ன

தாணிக்குள்பராங்குச
தாசனையாட்கொள்சீதாராமையனே-ஓராமையனே இன்

நாமாவளி

எதிராசனேதெய்வம்நாம்
கதியெனத்துதிசெய்வோம்
பதிகபாவனன்மகிழ்மந்திரிகாய்சத்
கதியளித்திடயிட்டதுயில்வந்துதித்த

இ-ம்-முகாரி ஆதிதாளம்

பல்லவி

அரி அரி அச்சுதகிருஷணகோவிந்தா-உன்

அநுபல்லவி

ணடியையெந்தனுக்கருள்செய்கோவிந்தா

சரணங்கள்,

கரியைவந்தாதரித்தாப்போல்கோவிந்தாஎன்னை
காத்தருளிந்தவேளைகோவிந்தா அரிகரி

தெண்டனிட்டுந்தனையடைந்தேன்-உந்தன்
தீவினையகற்றியாள்வாய்கோவிந்தா அரிகரி

தொண்டனுக்குதவிசெய்யுங்கோவிந்தாஎன்னை
தோஷரகிதனுகச்செய்கோவிந்தா அரிகரி

எந்தனிடர்தனைத்திர்ப்பாயகோவிந்தாஎளி
யேனுடையகைவிடாதேகோவிந்தா அரிகரி

இந்ததேசத்தைஇனிமேல்கோவிந்தாஎனக்
கில்லாமல்வரமளிப்பாய்கோவிந்தா அரிகரி

துக்ககதியைக்காணாமல்செய்கோவிந்தாவுந்தன்
தூயசற்பதம்பணிந்தேன்கோவிந்தா அரிகரி

நற்கனியெனக்கினிதாமோகோவிந்தாஸ்ரீ
பரங்குசநாமத்தைக்கொண்டகோவிந்தா அரிகரி

இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி

உனையல்லாலன்பரைத்துதியேன்-இதை
உண்மையென்றறிரகுபதியே

அநுபல்லவி

உனையல்லான்பரைஒருக்காலும்நினையேனென்
மனதறியச்சொன்னேனுன்மலரடிசாட்சியாய்

சரணங்கள்

அற்பதெய்வத்தைக்கண்ணாலேபாரேன்-இவை
அறிந்தென்மனக்கவலைதீரேன்
சொற்பசுகத்துக்காகத்தொழேனென்னுரைக்கேள்
சர்பசயனாவென்தாய்லட்சுமிசாட்சியாய் உனை

இதரக்கதையைக்காதால்கேளேன்-இதை
எண்ணியுன்னடிகொடுத்தாலேன்
பதிபாவனனென்றுபணிந்தேநுந்தனையே சண்
மதத்தாரறியச்சொன்னேன்மண்விண்ணும்சாட்சியாய் உ

குருவினடியைவிட்டுவேறறியேன்-இதை
குறித்துக்கொள்ளுநன்னெஞ்சில்-ஓஅரியே
தரணிக்குள்பராங்குசதாசர்க்கனுகூலனே
அறிந்துன்னையடைந்தேனென்னாசாரியர்சாட்சியால் உனை

நாமாவளி.

உடையவரேநமதெய்வம்
அவரடியைகடுகளவுமென்றுய்வோம்
படிதனில்பாஷாண்டகோடிகளையறுத்து
திடமுடன்அரியின் [illegible]ள்சுரஸ்மிதமென்ற உடை



இ-ம்-சஹானா-ஆதிதாளம

பல்லவி

நாரணனே உன்னடிதந்தென்னையாளை

அநுபல்லவி

தாரணிதனிலென்மேல் தயவில்லையே என்ன
காரணமோ காண்கிலேனிதை அரி அரி — நாரண

சரணங்கள்

ஆருமற்றவனைப்போலலையவிடாதே கண்
பாருமையா மகாபாவியான் அரி அரி — நாரண

எக்காலமோ எந்தனுக்கிரங்குவது நீ
திக்கார் இத்தேசத்தில் அரி அரி — நாரண

பாசமறச்செய்த இப்பாரினில் பராங்குச
தாசனையாளினி ஜாலமேனரிகரி

எச்சரிக்கை

இ-ம் நாதநாமக்கிரியை

பல்லவி

திருமகள் தனக்குமுகத்துக்குச் சந்திரன்பாலமர்ந்தவனே
குருவருளமர்ந்திருப்பவர்க்கு கொடுப்பவனே யெச்சரிக்கை — திரு

சரணங்கள்

அலைகடலுக்குள்ளொளித்தசுரனைக் கொலைநடுங்கச்செய்தனனே
மலையானைசுமந்திமனமகிழ்ந்தன[illegible] யெச்சரிக்கை — திரு

தரணியைச்சுருட்டெடுத்திடனின்றிடுவனைக்கொன்றவனே
இரணியனுயிரடிப்படவுருவெடுத்தவனேயெச்சரிக்கை திரு

புலவனுக்கனுஜனியுதித்தபலிதனைவஞ்சித்தவனே
நிலததசூரர்கள்குலமறுத்தெங்கும்ஜொலித்தவனேஎச்சருக்கை(

இருடிகளெழுவருக்கிடரொழியவந்தவதரித்தவனே
புருஷனுக்குமுன்பிறந்தமலைக்குள்இருந்தவனேஎச்சரிக்கை தி

எதுகுலபதிகுலபதிதாய்பூசதிக்கருளளித்தவனே
பதியர்கள்முன்கற்பியர்யுதிர்த்துயெதிர்த்தவனேயெச்சரிக்கை தி

தசவிதவடிவெடுத்தடியார்தூர்த்தசைகளைப்போக்கித்தவனே
வசியெட்டபாங்குசதாசர்களுக்கிசைந்தவனேஎச்சரிக்கை திரு

## மங்களம்.

இ-ம்-பைரவி-சாப்புத்தாளம்

### பல்லவி.

ஜெயமங்களம்-நித்தியசுபமங்களம்.

### அநுபல்லவி.

அயன்மான்பணியும்ஆதிநாராயணனுக்கும்
பயசுதனிமேலென்றும்படுப்பவனுக்கும்
உயர்படும்பக்தர்களுக்குதவிசெய்பவனுக்கும்
கயமிடருறப்போயதைக்காத்தவனுக்கும்

### சரணங்கள்.

அண்டமுண்டுமிழும்பிரமாண்டநாயகனுக்கும்
பண்டராட்சதர்மடியப்பார்ப்பவனுக்கும்
தொண்டர்வினைகளைப்போக்கிசுகத்தை யருள்பவனுக்கும்
குண்டலிதனைக்கொடையாய்கொண்டவனுககும் ஜெயம

தங்கவஸ்த்ரமிடையில்தரித்துநடப்பவனுக்கும்
மங்கைலட்சுமியைக்கூடி மகிழ்பவநுக்கும்
பொங்கமதாய்செகமெங்கும்போற்றித்துதிப்பவனுக்கும்
சங்காழிதனைக்கையில்தரித்தவனுக்கும் ஜெயம

பூமகள் பூமகளுமிருபுறமுமிருப்பவனுக்கும்
பாமகள்மணாளன்றனைப்படைத்தவனுக்கும்
கோமளரங்கனுக்கும்ரவிகுலதிற்காரனுக்கும்
ஸ்ரீமத்பராங்குசதிவ்யநாமத்தவனுக்கும் ஜெய்ம

ஸ்ரீபராங்குசதாசர் அருளிச்செய்த
அரிபஜனைகீர்த்தனை முற்றிற்று